செ.வெ.எண் : 20/ மே நாள் : 22.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## கொரோனா சிகிச்சைக்கான படுக்கைகள் குறித்த விபரங்களை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ள 24 மணி நேரமும் செயல்படும் ஒருங்கிணைந்த கட்டளை மையத்தின் (War Room) தொடர்பு எண்கள் விபரம்

## மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்டத்தில், கொரொனா நோய் தொற்று அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் மற்றும் கொரொனா நோயாளிகளுக்கு உதவிடும் வகையில் தமிழக அரசின் உத்தரவின்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த கட்டளை மையம் போர்க்கால அடிப்படையில் இயங்கும் கட்டுப்பாட்டுஅறை (War Room) செயல்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் மருத்துவர்கள் மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து குழுவாக 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

பொதுமக்கள் இம்மையத்தினை தொடர்பு கொண்டு மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்காக உள்ள படுக்கைகள், பிராணவாயுவுடன் கூடிய படுக்கைகள் குறித்த விவரங்களையும் மற்றும் நோயாளிகளின் உடல் நலக்குறைவிற்கேற்ப தக்க மருத்துவ அறிவுரை வழிகாட்டுதல்களையும் பெறலாம். இம்மையத்தினை 7708711334, 7708292732, 04567-230060 ஆகிய எண்களிலும், 1077 என்ற கட்டணமில்லா தொடர்பு எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இது தவிர மாநில அளவிலான கட்டளை மையத்தை 104 என்ற கட்டணமில்லா தொடர்பு எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**